க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அஞ்சுகம் முத்துவேலர் அரசினர் மேல்நிலைப்பள்ளி– திருக்குவளை, நாகை மாவட்டம் – 610 204.
தொடர்புக்கு... 7598868760, 9524302724.
மின்னஞ்சல்: srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com

# அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2015
# பத்தாம் வகுப்பு தமிழ் முதல் தாள் - விடைக்குறிப்புகள்

## பிரிவு – I

**பகுதி – 1 :**
01. இ. பாரதிதாசன 02. ஆ. சேர 03. அ. பன்னாடு தநத மாறன் வழுதி
04. ஆ. சிலப்பதிகாரம் 05. அ. விமான 06. இ. தாராபாரதி

**பகுதி – 2 :**
07. தென்னை 08. மருணீக்கியார் 09. மிளைகிழான் நல்வேட்டனார்
10. திருக்குறள் 11. அம்பேத்கர் 12. கருத்துப்படம்

**பகுதி – 3 :**
13. இளைப்பாறுதல் - ஓய்வெடுத்தல்
14. கோதில் - குற்றமில்லாத
15. கான் - காடு
16. நாவாய் - படகு

**பகுதி – 4 :** (17 முதல் 20 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளிருந்தால் மதிப்பெண் அளிக்கலாம்)
17. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் யார்?
18. ஆயகலைகள் எத்தனை?
19. காந்தியடிகள் எந்த நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்?
20. யார் அருளிய வழிகளைக் கடைபிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்?

## பிரிவு – II – பகுதி – 1

21. காலமறிந்து, இடத்தோடு பொருந்தச் செயல்பட்டால் ஞாலம் கருதினுங் கை கூடும்.
22. ✸ ஒழுக்கத்தால் எய்துவது மேன்மை. ✸ இழுக்கத்தால் எய்துவது அடையக் கூடாத பழி
23. இராமன் குகனிடம் கூறியது
24. கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலில் எறிந்த போது, அக்கல்லினையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய பெருமையினை உடையவர் திருநாவுக்கரசர் என பெரியபுராணத்தில் அப்பூதியடிகள் வழியாக சேக்கிழார் உணர்த்துகிறார்.
25. தம்மைக் காட்டிலும் அறிவிற் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்று நடத்தலே வன்மையுள் எல்லாம் தலையாயது ஆகும்.
26. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
27. கார், தவம், சித்து, தூது (பிற விடைகளும் உள்ளன)

## பகுதி – 2

28. பேச்சு மொழியாக, எழுத்து மொழியாக, ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக, பயிற்று மொழியாக அமைய வேண்டும்.
29. பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம்
30. பல்வகை விலங்குகளின வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை
31. பாணன், பாடினி, கூத்தன், விறலி
32. கண்ணிடத்து அப்பியவர் கண்ணப்பர். அவர் வரலாறு உணர்த்தும் செய்தி ஊனுக்கு ஊன் என்பதாகும்.
33. கதர் இயக்கம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு
34. திருவருட்பா, தெய்வமணி மாலை, வடிவுடை மாணிக்க மாலை, எழுத்தறியும் பெருமான் மாலை

35. இன்று ஓய்வெடுத்து நாளை செல்லலாம் என்று எண்ணினால், ஓர் இரவுக்குள் என்னென்ன நேருமோ?
பணியை முடித்து ஓய்வு பெறுக தம்பி! இனிக்கும் செய்திகள் உன் மனதில் வந்து குவியும்.
செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வெடுப்பதில்லை.
செடியின் வெற்றி பூவில் உள்ளதைப் போல், நமது வெற்றிகளால் துன்பங்கள் ஓடிவிடும்.

36. குகன் நம் மீது கொண்ட அன்பினால் கொண்டு வந்த பொருட்கள் சிறப்புடையன.
அமுதத்தை விடச் சிறந்தன. தூய்மையானவை.
என் போன்றோர்க்கு உரியன.
ஆதலால் இனிமையான இப்பொருள்கள் நாம் விரும்பி உண்டதற்கு சமம் என்று விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறினான்.

37. அரசனால் சிறப்பு அடைவது, யானை, தேர், குதிரையில் அரசர் முன் செல்வது செல்வமன்று.
அது அவரவர் முன்வினைப் பயன் மட்டுமே.
புகலிடம் தேடி வந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வம் எனச் சான்றோர் கூறுகின்றனர். இவையே தலைவனுக்குத் தோழி கூறும் செய்தி ஆகும்.

38. போலிப்புலவர்களின் தலையில் குட்டுபவர் அதிவீரராம பாண்டியன் (பிள்ளைப்பாண்டியன்)
செவியை அறுப்பவர் வில்லிபுத்தூரார்
தலையை வெட்டுபவர் ஒட்டக்கூத்தர்

39. சீறாப்புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவர்.
இறைவனின் திருத்தூதர் நபிகள் நாயகத்தின் வரலாற்றினைக் கூறுவது சீறாப்புராணம்
சீறா - வாழ்க்கை, புராணம் - வரலாறு
விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் எனும் மூன்று பிரிவுகளை உடையது.
ஐந்தாயிரத்து இருபத்தேழு பாக்களை உடையது சீறாப்புராணம்.

40. அம்பேத்கர் மராட்டிய மாநிலத்தில், இரத்தினகிரி மாவட்டத்தில் அம்பவாடே என்ற ஊரில் பிறந்தார்.
1891 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதினான்காம் நாள் பிறந்தார். அவரின் இயற்பெயர் பீமாராவ் ராம்ஜி.
மகாபாரத பீமனைப் போல் அசைக்க முடியாத வீரனாக வளர வேண்டும் என்று எண்ணி அவருடைய பெற்றோர் அவருக்கு பீம் என்று பெயர் சூட்டினர் பெற்றோர்.
அம்பேத்கர் என்ற ஆசிரியர்பால் கொண்ட பற்றின் காரணமாக இவர் தன்னுடைய பெயரை அம்பேத்கர் என மாற்றிக் கொண்டார்.

41. தமிழரிடம் இன்று பரவியுள்ள பெருநோய் மணக்கொடை
பெற்றோர் தன் மகனுக்காகச் செலவழித்தப் பணத்தை முதலீடாகக் கருதி வரப்போகும் மனைவியிடம் மணக்கொடையாக பெற்றுவிட வேண்டும் என்று துடிக்கின்றனர்.
முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான் மணக்கொடையை ஒழிக்க முடியும்.
தமிழ்நாட்டு இளைஞர்கள் செக்குமாடுகளாய் இல்லாமல் பந்தயக் குதிரைகளாக மாறி தாமே உழைத்து முன்னேற வேண்டும் என்றார் பெரியார்.

42. சிறப்பாக பேசுவதற்கு தொடக்கமே அடித்தளம்.
கேட்போரை தன்வயப்படுத்தும் முறையில் தொடங்க வேண்டும்.
சுருக்கமான முன்னுரை சிறப்பானது.
ஓரிரு மணித்துளிகளில் பொருளில் புகுந்து விட வேண்டும்.
இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப தொடக்கவுரை அமைதல் நல்லது.

43. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் அரிசந்திரன் நாடகம்
அரிச்சந்திரன் உண்மையை மட்டுமே பேசும் மன்னன்.
விசுவாமித்திரர் என்ற முனிவர் அரிச்சந்திரனை பொய் பேச வைக்க பல இன்னல்களைத் தருகிறார்.
நாடு, மனைவி, மகனை இழந்தாலும் பொய் பேச மாட்டேன் என்று உறுதியுடன் இருந்தான் மன்னன்
வாய்மையின் வலிமையை உணர்ந்த காந்தியடிகள் அந்நாள் முதல் தாம் ஒரு சத்தியவானாக இருக்க வேண்டும் என்று உறுதி பூண்டார்.

44. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் தமிழின் பழஞ்சிறப்பினை, நிலவு, கதிரவன், வான், விண்மீன், கடல் ஆகியன தோன்றிய போது தோன்றிய தமிழோடு நாங்கள் பிறந்தோம் என்ற பொருள் கொண்ட பின்வரும் பாடல் மூலம் பாராட்டுகிறார்.

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்".

## பிரிவு – IV

45. அ. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆ. குலசேகர ஆழ்வார் இ. மாலையணிந்த அரசன்
ஈ. போன்று + இருந்தேன் ஈ. மீன்நோக்கும், பானோக்கா, தானோக்கா, கோனோக்கி

46. அ. தமிழ் மொழியின் தாய்மையும் தனித்தன்மையும் (பிற விடைகளும் எழுதலாம்)
ஆ. தமிழ் மொழி பிராகுயி முதலான வடபுல மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாக விளங்குகிறது என்பதே கால்டுவெல்லின கூற்றாகும்.
இ. நூற்று எண்பது ஈ. தமிழர் அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்.
உ. திருக்குறள்

## பிரிவு – V பகுதி – 1

47. அ. காலமறிதலின் சிறப்பு - காலமறிந்து செயல்படுதலால் ஏற்படும் பயன்கள் - உரிய காலத்திற்காக காத்திருத்தலின் சிறப்பு - பகைவரை எதிர்கொள்ளும் முறை - காலம் வரும் போது விரைந்து செயலைச் செய்தல் - காத்திருத்தலும் செயல்படுதலும் ஆகிய தலைப்புகளை ஒட்டிய கருத்துகள்
ஆ. ஒருவன் முகமது நபியை வணங்கி செய்தியைக் கூறுதல் - புலி இருக்குமிடம் தெரிவித்தல் - புலியின் தோற்றம் - புலியின் வெறிச் செயல்கள் - முகமது நபி புலி இருக்குமிடம் கேட்டல் - முகமது நபி வருவதைப் பார்த்து புலி வணங்குதல் - முகமது நபி தம் கரத்தினால் புலியைத் தடவுதல் - முகமது நபியை வணங்கி புலி புறப்படுதல் - முகமது நபியின் செயலைக் கண்டோர் வியந்து போற்றுதல் - ஆகிய தலைப்புகளை ஒட்டிய கருத்துகள்

48. அ. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகள் - பெண்கல்வி - பெண்ணுரிமை - சொத்துரிமை - அரசுப்பணி - ஆகிய தலைப்புகளை ஒட்டிய கருத்துகள்
ஆ. இசைக்கலை - முன்னுரை - தமிழர்களின் வாழ்வில் இசை - பண்கள், இசைக்கருவிகள், இசைக்கலைஞர்கள், இசைப்பாடல்கள் - இலக்கியக் குறிப்புகள் - நரம்பின் மறை - தொல்காப்பியரின் கூற்று - இயலிசை நாடகக் கலைஞர்கள் - பாணன், பாடினி, கூத்தன், விறலி - தமிழர் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை இசை - தாலாட்டு முதல் ஒப்பாரி முடிய - பண்ணொடு தமிழொப்பாய் - தேவாரம் - தோல், துளை, நரம்புக் கருவிகள - ஐந்திணைக்குமான இசைக்கருவிகள் - வள்ளுவரின் கூற்று - ஆகிய குறிப்புகளை உள்ளடக்கிய கருத்துகள்.

## பகுதி – 2

49. அ. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே,
நல்லார் தொடர்கை விடல்

ஆ. எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
செய்தற் கரிய செயல்

இ. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார்

ஈ. திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான் என்றார்.